 C#minor

உங்க பிள்ளை நான்
நான் ஏன் கலங்கனும்
அழைச்சது நீங்க
நடத்திச் செல்வீங்க

1) திட்டங்கள் தருபவரும் நீர்தானய்யா
செயல்படுத்தி மகிழ்பவரும் நீர்தானய்யா
எஜமானனே....... என் ராஜனே -2
எஜமானன் நீர் இருக்க
வேலைக்காரனுக்கு ஏன் கவலை.

2) எலியாவை காகம் கொண்டு போஷித்தீரே
சூரைச்செடி சோர்வு நீங்க பேசினீரே
தெய்வமே....... பேசும் தெய்வமே -2
எலியாவின் தேவன் இருக்க
எதுவும் என்னை அசைப்பது இல்லை.

3) பவுலையும் சீலாவையும் பாடவைத்தீரே
சிறையிலே நல்லிரவில் ஜெபிக்க வைத்தீரே
கதவு திறந்தன கட்டுக்கள் உடைந்தன -2
காக்கும் தெய்வம் நீர் இருக்க
கவலை பயம் எனக்கெதுக்கு